



# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## குடிசைப்பகுதி மாற்று வாரியம்

## மானியக் கோரிக்கை எண் - 26

## அறிவிப்புகள்

## 2021-2022

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## குடிசைப்பகுதி மாற்று வாரியம்

**மானியக் கோரிக்கை எண் - 26**

## அறிவிப்புகள்
## 2021-2022

**தா.மோ.அன்பரசன்**
அமைச்சர்
ஊரகத் தொழில்கள்

## 1. சிதிலமடைந்த 7500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் நடப்பு நிதியாண்டில் ரூ.1200 கோடி திட்ட மதிப்பீட்டில் மறுகட்டுமானம் செய்யப்படும்.

சென்னை மற்றும் இதர நகரங்களில் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டடப்பட்ட குடியிருப்புகள் பயன்பாடு மற்றும் தேய்மானம், இயற்கையின் தட்ப வெப்ப மாறுபாடு ஆகியவற்றால் சிதிலமடைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

இக்குடியிருப்புகள் தொழில்நுட்ப குழுவின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் நான்கு ஆண்டுகளில் மறுகட்டுமானம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 2.மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கான முழுத் தொகை செலுத்திய 10,000 குடும்பங்களுக்கு நீண்ட காலமாக வழங்கப்படாமல் உள்ள விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படும்.

MUDP, TNUDP திட்டங்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி உள்ளிட்ட பல நகரங்களில் 1977 முதல் 1992 வரையில் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டங்களின் கீழ் மாதாந்திர தொகை முழுவதுமாக செலுத்திய 10,000 குடும்பங்களுக்கு விற்பனை பத்திரங்கள் வழங்கப்படும். மறுவிற்பனை மூலம் தற்போது வசித்துவரும் குடியிருப்போருக்கு விற்பனை பத்திரம் வழங்க புதிய சமரசத் திட்டம் வகுக்கப்படும்.



## 3.வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு முழுத்தொகை செலுத்திய 15,000 பயனாளிகளுக்கு நடப்பு நிதியாண்டில் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படும்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மாதாந்திர தவணைத் தொகை முழுமையாக செலுத்திய குடியிருப்புகளின் ஒதுக்கீடுதாரர்களுக்கு குறிப்பிட்ட கால வரம்பிற்கு பின்னர் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படும். 2021–22ஆம் நிதியாண்டில் 15,000 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படும். **மீதமுள்ள குடியிருப்புகளுக்கு தகுதியின் அடிப்படையில் படிப்படியாக வழங்கப்படும்.**

**4.கட்டுமானப் பணிகளின் தரத்தினை பல்வேறு நிலைகளில் உறுதி செய்ய இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) மற்றும் அண்ணா பல்கலைக் கழகம் போன்ற மேன்மையான மூன்றாம் தரப்பு தரக் கட்டுபாடு வல்லுநர் குழுக்கள் அமைக்கப்படும்.**

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் நகர்ப்புற ஏழை மக்களுக்காக கட்டப்படும் கட்டடங்களின் தரத்தினை உறுதி செய்ய சென்னை-IIT, தேசிய தொழில் நுட்ப கழகம், அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் அரசு பொறியியல் கல்லூரிகள் போன்ற மூன்றாம் தரப்பு தரக்கட்டுபாடு வல்லுநர் குழுக்களை நியமித்து ஆய்வு மேற்கொண்டு, கட்டடப் பணிகளின் தரம் உறுதி செய்யப்படும்.



**5.மறுகட்டுமானம் செய்யும் காலத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் ரூ. 8,000 கருணைத் தொகை ரூ. 24,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

மறுகட்டுமானம் செய்ய ஏதுவாக அடுக்குமாடி குடியிருப்புகளை காலி செய்து வாடகை வீட்டில் வசிப்பதற்காக வழங்கப்படும் ரூ.8,000/- கருணைத் தொகை ரூ.24,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

இத்திட்டத்தை விரிவுபடுத்தி நகரக் குடிசைப்பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு அதே பகுதியில் புதிய குடியிருப்புகள் கட்டப்படும் பொழுது (Insitu development) அங்கு வசிக்கும் மக்களுக்கும் கட்டுமானம் செய்யும் காலத்தில் வாடகை வீடுகளில் வசிப்பதற்காக ரூ.24,000/- கருணைத் தொகை வழங்கப்படும்.

**6.பராமரிப்பின்றி பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூபாய் 70 கோடி செலவில் எழில்மிகு தோற்றப் பொலிவு பெறும் வகையில் புனரமைக்கப்படும்.**

சென்னை மற்றும் இதர நகரங்களில் 15 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட 17,500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் போதிய அடிப்படை வசதிகள் மற்றும் பராமரிப்பின்றி பொலிவு இழந்த நிலையிலுள்ளன.

இத்திட்டப்பகுதிகள் புது பொலிவு பெறும் வகையில் குடியிருப்புகளை பழுது பார்த்தல், புதுவர்ணம் பூசுதல், கீழ்நிலை தண்ணீர் தொட்டி அமைத்தல், குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புகளை சரிசெய்தல், பாதுகாப்புடன் நவீன மின் இணைப்பு வசதிகள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.



**7.குடியிருப்போர் நலச்சங்கங்களின் பங்களிப்புடன் "நம் குடியிருப்பு – நம் பொறுப்பு" என்ற திட்டத்தின் மூலம் பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்.**

தமிழகமெங்கும் 1.80 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகளை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் பராமரித்து வருகின்றது.

"நம் குடியிருப்பு – நம் பொறுப்பு" என்ற புதிய திட்டத்தின் மூலம் குடியிருப்போர் நலச் சங்கங்களை ஈடுபடுத்தி குடியிருப்புகள் பராமரிக்கப்படும். குடியிருப்புகளின் பராமரிப்பு செலவினங்களுக்கான மொத்த செலவில் 50 விழுக்காடு அரசாலும் மீதமுள்ள 50 விழுக்காடு குடியிருப்போர் நலச் சங்கங்களாலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**8.வசதியற்ற பயனாளிகளின் சிரமத்தினை குறைக்கும் வகையில் வங்கி கடன் பெற்று பங்களிப்பு தொகை செலுத்த வழி வகை செய்யப்படும்.**

அடுக்குமாடி குடியிருப்பிற்கான திட்ட செலவினத்தில் பயனாளிகளின் பங்களிப்பும் அடங்கும். இத்தொகையை ஒரே தவணையில் செலுத்த இயலாத பயனாளிகளுக்கு அவர்களது பங்களிப்பினை செலுத்துவதற்கு ஏதுவாக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், முதன்மை கடன் நிறுவனங்கள் மற்றும் பயனாளிகளுக்கு இடையே முத்தரப்பு ஒப்பந்தம் மூலம் கடனுதவி பெற்றுத் தரப்படும்.



**9.புதிதாக கட்டப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் மாற்றுத் திறனாளிகளின் தேவைக்கேற்ப வசதிகள் அமைக்கப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் தரைத்தள வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படும்.**

அடுக்குமாடி திட்டப்பகுதியிலுள்ள தரைதள குடியிருப்புகள் மாற்றுத் திறனாளிகளின் தேவைக்கேற்ப கட்டமைப்பு வசதிகளான கைப்பிடியுடன் கூடிய சாய்தளம் மற்றும் இதர வசதிகளும் அமைக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 10. தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் குடிசைப் பகுதி வாழ் இளைஞர்களுக்கு முழு நிதியுதவி வழங்கி விளையாட்டுத் திறன் மேம்படுத்தப்படும்.

குடிசைப்பகுதிகள் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்பு திட்டப் பகுதிகளில் விளையாட்டு நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படும். விளையாட்டு திறமை, நிபுணர்களால்கண்டறியப்பட்டு,சிறப்புபயிற்சிகள் வழங்க தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் ஊக்கம் அளிக்கப்படும். தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் இளைஞர்களுக்கு முழு நிதி உதவியுடன் இதர ஒத்துழைப்புகளும் வழங்கப்படும்.



## 11. வாரிய திட்டப்பகுதிகள் மற்றும் குடிசைப் பகுதிகளில் வாழும் 10,000 இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கி வேலை வாய்ப்புகள் பெற ஊக்குவிக்கப்படும்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் குடிசைப்பகுதி வாழ் இளைஞர்களின் கல்வி தகுதிக்கேற்ப திறன் மேம்பாட்டு பயிற்சிகள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவனங்களின் சமூக பொறுப்பு நிதி (CSR) ஆகியவற்றின் மூலமாக 10,000 இளைஞர்கள் பயன்பெறும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும்.